மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 33, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

33—

கிராமப்புற நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைபேரில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கல்.

*9934—திரு. கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமப்புற நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் ரேஷன் அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒதுக்கப்பட்டு விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிராமப்புற நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் போது, சென்ற மாதத்தில் அத்தியாவசியப் பண்டங்கள் இறுதி இருப்பினை அங்காடிக்குரிய அடுத்த மாதத்திற்கான ஒதுக்கீட்டில் கழித்து, மீதம் இருக்கின்ற அளவிற்கு உரிய அத்தியாவசியப் பண்டங்கள் அந்த அங்காடிக்கு வழங்கப்படுகிறது.

திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்தபோது அட்டைக்கு ஏற்ப ஒதுக்கீடுகள் செய்யப்படாமல் இருக்கிறது என்று சொன்ன கருத்தை வைத்துத் தான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அதற்கடுத்து இப்போது கிராமப்புறங்களில் நான் சுற்றுப்பயணம் செய்யும் போது எந்த கிராமத்திற்காக நான் அந்தக் கேள்வியைக் கேட்டேனோ அதே கிராமத்தில் உள்ள அந்த மக்களிடம் கேட்டபோது அந்த நிலை மாறி இப்போது எங்களுடைய அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப எத்தனை கிலோ ஒதுக்கப்

1993 பிப்ரவரி 9]

படவேண்டுமோ அது முறையாக ஒதுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அந்த மாதம் முழுவதும் எந்த நேரத்தில் சென்றாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலை இருந்து வருகிறது. எனவே அந்த மகராசிக்கு எங்களுடைய நன்றியைச் சொல்லுங்கள் என்று அந்த கிராம மக்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவர்கள் சொன்ன நன்றியை என் வாயிலாக இந்த அவையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் இப்போது கூட்டுறவுத் துறைக் கடைகளில் மண்ணெண்ணை வழங்கப்படுவது போல் தனியார் சிலர் உரிமம் பெற்று மண்ணெண்ணையை மட்டும் கொடுக்கிறார்கள். அந்த மண்ணெண்ணைக் கொடுக்கின்ற தனியார்கள் ஒழுங்காகக் கொடுப்பதில்லை என்ற குறைபாடுகள் இருந்து வருகின்றன. எனவே அந்த தனியார்கள் உரிமத்தை ரத்து செய்து கூட்டுறவுத் துறையின் மூலமே முழுவதும் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் சொன்னதைப் போல கெரோசின் ஒன்றைத் தவிர மற்ற அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் மாதத்தின் எல்லா நாட்களிலும் கிடைக்குமாறு உத்தரவிட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் வேறு எங்கும் இல்லாத சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதல் இடத்தை பொது விநியோக முறையிலே தமிழகம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

கெரோசினைப் பொறுத்தமட்டில் அது ஆயில் கம்பெனிகளிலிருந்து வருகின்ற தேதி முன்கூட்டியே அறிவிக்கப்படாத காரணத்தால் சில நேரங்களில் காலதாமதம் ஆகிறது. அப்படிப்பட்ட நேரத்திலேயும் எப்போது வரும் என்பதை எழுதி வைக்கச் சொல்லி இருக்கின்றோம். தனிப்பட்ட லைசென்ஸ்தாரர்கள் எங்காவது முறைகேடு செய்து குடும்ப அட்டைகளுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக லைசென்ஸை ரத்து செய்து அவைகளைக் கூட்டுறவு கடைகளுக்கே அளித்து விடுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளை வழங்குவதிலே

குறிப்பாக சில இடங்களிலே 10 ஆயிரம் 15 ஆயிரம் மனுக்கள் இருந்தாலும் கூட அந்த தாலுகா ஆபீசிலே இருக்கின்ற டி.எஸ்.ஓ., தாசில்தார் எல்லாம் 800 கார்டுதான் இருக்கிறது; 1000 கார்டுதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். பாக்கிப் போகளுக்கு இன்னும் அரசிடமிருந்து அட்டைகள் வரவில்லை என்று சொல்கிறார்களே, அப்படிப்பட்ட இடங்களிலே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, அத்தியாவசியப் பொருள்கள் குறித்து.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அந்த அத்தியாவசியப் பொருள்களைக் கூட வாங்க வேண்டுமென்றால், இந்த குடும்ப அட்டைகள் இருந்தால்தான் வாங்க முடியும். ஆகவே, அத்தியாவசியமான பொருள்களை வாங்குவதற்கான அட்டைகளை விரைவிலே வழங்குவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது அல்ல என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் போல உரிய தேவையான அனைத்து பேருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படும். பிப்ரவரி 28ஆம் தேதி வரையில் மனுக்கள் செய்வதற்கு கால அவகாசம் இருக்கிறது. அதற்குப் பிறகு பரிசீலனை செய்து உண்மையான குடும்பங்கள் அனைத்துக்கும் அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கிராமப் புறங்களிலே டீசல் ஒரு அத்தியாவசிய பொருளாக மாறி வருகிறது. எனவே புதுமையைச் செய்கின்ற இந்த அரசு கூட்டுறவுத் துறையில் நியாய விலை கடைகளில் டீசல் விநியோகிக்கப்பட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட கருத்துரு பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே ஏழை மக்கள் காலையிலே வேலைக்குப்

1993 பிப்ரவரி 9]

போய்விட்டு இரவு 6 மணி அளவில் தான் திரும்புகிறார்கள். ஆகவே, அங்காடிகளுக்கு சென்று பொருட்களை வாங்குவதற்கு அவர்களுக்கு நடைமுறையிலே சிரமம் ஏற்படுகிறது. தனியார் மளிகைக் கடைக்காரர்கள் எல்லாம் காலையிலே 6 மணிக்கு கடையைத் திறந்து இரவு 10 மணி வரைக்கும் வியாபாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த கிராமப்புற ஏழை மக்கள் உணவுப் பொருட்களை வாங்குகிற வகையில் இரவு 8 மணி வரையில் அங்காடிகளைத் திறந்து வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கடைகள் காலை 9 மணியிலேயிருந்து 1 மணி வரையிலும், பிற்பகல் 3 மணியிலேயிருந்து 7 மணி வரையிலும்திறக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமானால் அந்தந்த மாவட்ட நிர்வாகமே செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கின்றோம். அப்படிப்பட்ட பிரச்சினைகளை அந்தந்த மாவட்டத்திலேயே முடிவு செய்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்திலே நான் மூன்று மாதங்களுக்கு முன்பாக, தள்ளுவண்டியிலே கெரோசின் விற்பவர்கள் எடுத்துக் கொண்டு சென்று பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்று அரசு அதிகாரிகளிடத்திலே சொல்லியும் இது வரையிலே நடவடிக்கை எடுக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. இது சம்பந்தமில்லாத கேள்வி.

வினா எண் 34 திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

34—

கோயம்புத்தூரில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் அமைத்தல்.

*11823—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்